செ.வெ.எண்-14 நாள்-07.10.2017

# பத்திரிக்கைச் செய்தி

அரியலூா் மாவட்டத்தில் மாவட்ட நிர்வாகம் மற்றும் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம் மற்றும் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் இணைந்து நடத்தும் மாவட்ட அளவிலான மாபெரும் தனியார்த்துறை வேலைவாய்ப்பு முகாம் 14.10.2017 அன்று அரியலூர் மாவட்ட அரசு மேல்நிலைப்பள்ளியில் நடத்தப்பட உள்ளது. இம்முகாமில் அரியலூர் மாவட்டத்தைச்சார்ந்த நிறவனங்கள் மற்றும் சென்னை, திருவள்ளுர், திருச்சி, கோவை மற்றும் திருப்பூர் போன்ற பெருநகரங்களில் உள்ள 100-க்கு மேற்பட்ட தனியார் நிறுவனங்களில் தங்கள் நிறுவனத்திற்கு தேவையான ஆட்களை தேர்வு செய்து வேலைவாய்ப்பு வழங்க உள்ளனர். மேலும், இளைஞர்கள் வேலைவாய்ப்பு பெறுவதற்கு தேவையான திறன் பயிற்சியினை பெறுவது தொடர்பாக தமிழ்நாடு திறன்மேம்பாட்டு கழகத்தாலும், அயல்நாட்டு வேலைவாய்ப்பு பெறுவது தொடர்பாக OMCL நிறுவனத்தாலும் மற்றும் வேலைவாய்ப்பு அலுவலகம் தொடர்பான மாதிரி வேலைவாய்ப்பு அலுவலகம் தனித்தனி அரங்குகள் அமைக்கப்பட்டுள்ளது.

எனவே, இந்த நேர்காணலில் 8-ஆம் வகுப்பு முதல் தொழிற்பயிற்சி, பட்டயப்படிப்பு, நர்சிங், பொறியியல், இளங்கலை மற்றும் முதுகலை பட்டப்படிப்பு வரை படித்த ஆண் / பெண் இருபாலரும் கலந்து கொண்டு பயன்பெறுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

மேற்கொண்ட கல்வித்தகுதி உடைய அனைத்து நபர்களும் உரிய கல்விச்சான்றுகள், சுயவிவரகுறிப்பு மற்றும் புகைப்பட நகலுடன் தவறாது கலந்துக்கொள்ளுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.க.லட்சுமி பிரியா இ.ஆ.ப., அவர்கள் தெரிவிக்கிறார்கள்

செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.